**அனுப்புநர்**

திருமதி.க.சசிகலா,
இயக்குநர்,
அரசுத்தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. முதன்மைக் கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்), அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண். 013061/பி1/2025** **நாள்: 21.05.2026**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 – மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – தற்காலிக மதிப்பெண் சான்றிதழை (Provisional Certificate) மாணவர்களுக்கு விநியோகித்தல் – தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலக செய்திக் குறிப்பு நாள். 21.05.2026

*****

மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான முடிவுகள் **20.05.2026** அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து **22.05.2026 அன்று பிற்பகல்** முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலை/உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட USER ID, PASSWORD–ஐக் கொண்டு தங்கள் பள்ளி மாணவர்களுக்கு உரிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Certificate) பதிவிறக்கம் செய்து, அச்சான்றிதழ்களில் உள்ள விவரங்களை அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலில் (TML) உள்ள பெயர், பிறந்ததேதி, தலைப்பெழுத்து, பயிற்று மொழி மற்றும் மதிப்பெண்கள் ஆகியவற்றுடன் சரிபார்த்து, தலைமையாசிரியரின் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டு **22.05.2026** அன்று பிற்பகல் முதலே மாணவர்களுக்கு வழங்கலாம்.

தனித்தேர்வர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் தங்களது பதிவெண், பிறந்த தேதி ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Certificate) தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

...2...

**<u>கூடுதல் அறிவுரைகள்:-</u>**

1. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Certificate) அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுடன் (TML) சரிபார்த்து, அவற்றில் மாணவர் பெயர், பிறந்த தேதி, தலைப்பெழுத்து, புகைப்படம், பயிற்று மொழி ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தற்காலிக மதிப்பெண் சான்றிதழை இரு நகல்கள் எடுத்து தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு சான்றொப்பமிட்டு ஒரு நகலை மாணவர்களுக்கு அளித்திட வேண்டும். மற்றொரு நகலை தலைமையாசிரியர் வசம் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு சான்றிதழ் நகலினை சம்மந்தப்பட்ட தேர்வர்களின் மாற்றுசான்றிதழ் நகலுடன் இணைத்து பின்னர் இவ்வியக்ககத்தால் அறிவிக்கப்படும் நாளன்று அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். மேற்காண் நடைமுறையினை பின்பற்றினால் மட்டுமே பிழைகள் அற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சழுத்தம் செய்து மாணவர்களுக்கு வழங்க ஏதுவாக இருக்கும்.

3. தேர்வர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கும் போது மாற்றுச் சான்றிதழில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ் வரிசை எண்ணை எழுதும் கலத்தில் **"Refer Original Certificate"** என்று குறிப்பிட்டு தேர்வர்களுக்கு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சழுத்தம் செய்து பெறப்பட்டப் பின்னர், சம்பந்தப்பட்ட தேர்வருக்கான பள்ளியின் வசமுள்ள மாற்றுச் சான்றிதழ் பதிவேட்டின் Counterfoil-ல் சம்பந்தப்பட்ட தேர்வரது பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழின் வரிசை எண்ணை, பதிவு செய்து கொள்ள வேண்டும். மேற்படி Counterfoil-ல் மேற்கொள்ளப்படும் பதிவுகள் நிரந்தரமாக பின்வரும் காலத்தில் சரிபார்த்தலுக்காகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.மேலும், அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) நிரந்தர ஆவணம் என்பதால் அதனையும் முறையாக பராமரித்திடவேண்டும்.

...3...

மேற்காண் வழிமுறைகளை இணை இயக்குநர்(கல்வி), புதுச்சேரி மற்றும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-
**இயக்குநர்**

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6
2. உறுப்பினர் செயலர், மாதிரிப்பள்ளிகள், சென்னை-6
   -தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6
   - தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
5. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர், அனைத்து மாவட்டங்கள்.
6. கண்காணிப்பாளர், பி4 பிரிவு, அலுவலகம்.